[6th July 1962

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I request the Government to have a representative of agriculturists also in the State Consultative Council?

THE HON. SRI R. VENKATARAMAN : There is provision for it.

கிராம வீட்டு வசதித் திட்டம்

*166 கேள்வி.—திரு. டி. சின்னசாமி (திரு. கே. மூக்கையா தேவர் அவர்களின் சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய அரசினரால் வகுக்கப்பட்ட கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவது குறித்து விரிவான திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றிச் சட்டம் இயற்றும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. இராம அரங்கண்ணல் : கிராம வீட்டு வசதித் திட்டத்திற்கு லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்று வீடு கட்டிக்கொடுப்பதாகத் தெரிகிறது. இதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று இம்மாநில சர்க்காரிடம் டில்லி சர்க்கார் கேட்டிருந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ஸ்டேட் ஹௌசிங் போர்ட் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்.ஐ.ஸி.-யிலிருந்து நிதி உதவியை கடனாகப் பெறுகின்றது. இதற்கு டெல்லி சர்க்காரை கேட்கவேண்டிய அவசியமே கிடையாது. மாநில சர்க்கார் கொடுக்கும் கியாரண்டியின் பேரில் ஸ்டேட் ஹௌசிங் போர்டுக்கு கொடுக்கப்படுகிறது. எவ்வளவு தொகை என்கின்ற அறிக்கை பட்ஜெட்டின் விரிவான விவாதத்தின் போது சபையில் வைக்கப்படும்.

வராகநதி (அணை கட்டுதல்)

*166-ஏ கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் (திரு. கு. கோபால கவுண்டர் அவர்களின் சார்பாக) : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுகாவில் வராக நதியில் கட்டப்படும் அணைக்கட்டு திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள உத்தேசமுண்டா?

(இ) இல்லையென்றால், ஏன்?